# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1946 - 2015 දෙසැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2015.12.18

*1946 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1956 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1961 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அமுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, தை மாதம் 19 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 30.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி நகர கிழக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு, வைத்திய பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

12-508

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் முஸ்லிம் விவாக பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, தை மாதம் 19 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | ஹங்குரங்கெத்த | நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரங் கெத்த நகரப் பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், நுவரெலியா |

12-509

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் முஸ்லிம் விவாக பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, தை மாதம் 19 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டப் பிரிவின் ஹங்குரங் கெத்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், காலி |
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டப் பிரிவின் ஹிரிம்புர பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், காலி |

12-510

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் முஸ்லிம் விவாக பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, தை மாதம் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | தர்கா நகர் பகுதி களுத்துறை மற்றும் பாணந்துறை-தொட்டமுனைப் பிரிவில் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

12-511

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் முஸ்லிம் விவாக பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, தை மாதம் 19 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | அம்பாறை | அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை நகரப் பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அம்பாறை |

12-512

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - வவுனியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, தை மாதம் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மார்கழி 01.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| வவுனியா | வவுனியா தெற்கு | கிழக்குமூலை தெற்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வவுனியா தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர், அலுவலகம், வவுனியா |
| வவுனியா | வவுனியா தெற்கு | மாமடுவ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வவுனியா தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர், அலுவலகம், வவுனியா |
| வவுனியா | வவுனியா வடக்கு | மேல்பற்று கிழக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர், அலுவலகம், வவுனியா |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| வவுனியா | வவுனியா | நடுசெட்டிக்குளம் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர், அலுவலகம், வவுனியா |

12-518

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**

நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுடைய திணைக்கள ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1

| ஆட்சேர்ப்புக்கான பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தரம் |
|---|---|---|
| அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் | 1 | III ஆம் தரம் |

1.2 *பதவிக்குரிய கடமைகளின் தன்மை.*- அளவை நடவடிக்கைகளுக்குரிய உபகரணங்களையும், கருவிகளையும் பராமரித்தலும் மீளச் சீர்செய்தலும்.

2. நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத் திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3. **சம்பளம்** :

**அட்டவணை இல. 1**

| தரம் | சம்பளப் படிமுறை | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| III ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூபா 23,665 (MT- 1 - 2006A) | ரூபா 14,425 |
| II ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூபா 23,665 (MT- 1 - 2006A) | ரூபா 16,045 |
| I ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூபா 23,665 (MT- 1 - 2006A) | ரூபா 17,985 |

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் மூன்றாண்டு கால தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தலைமை அலுவலகத்தில் மாத்திரம் சேவையாற்றுவதற்கு தயாராயிருத்தல் வேண்டும்.

5. **தகைமைகள்** :

5.1 ***கல்வித் தகைமைகள்.***- க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக்குறைந்தது இரண்டு (2) திறமைச் சித்திகள் உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 ***தொழில் தகைமைகள்.***- அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இலத்திரனியல் அல்லது இயந்திரவியல் தொடர்பான (NVQ) 5 மட்ட பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் வேண்டும்.

5.3 ***அனுபவம்.***- குறித்த துறையில் ஆறு (6) ஆண்டுகள் அனுபவம் கொண்ட திணைக்கள ஊழியராய் இருத்தல் வேண்டும்.

5.4 ***உடல்சார் தகைமைகள்.***- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றவும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், போதிய உடல் ரீதியானதும், மனோ ரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

5.5 ***ஏனையவை.***- பதவியில் சேர்வதற்காக விண்ணப்பிப்போர் அதற்கான சகல தகைமைகளையும் இவ்வறிவித்தலில் காணப்படும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் சகல விதத்திலும் பூரணப் படுத்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- சகல விண்ணப்பதாரரும் பதவிக்குரிய தகைமைகள் அனைத்தையும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

6. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமை இல்லையெனத் தெரியவரின் இப்பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனுமொரு தகவலை அவர் அது பிழையானதெனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனும் முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

7. **பரீட்சை முறை.**- இப்பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்துப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம்

ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப்புள்ளிகளின் அளவு | சித்தி எய்தப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | 100 | 40% | 1 மணித்தியாலம் |
| 2. தொழில்நுட்ப வினாத்தாள் | 100 | 40% | 2 மணித்தியாலம் |

**8. தெரிவு முறை :**

8.1 நிலஅளவையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களிடையே நிரப்புவதற்கு உத்தேசிக்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரர்களது தொகை பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8.2 தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**9. விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் :**

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 21 x 29 செ. மீ. (ஏ4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரிகள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இல. 1 முதல் 5 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், இல. 6 முதல் 9.1 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும், இல. 9.2 முதல் 12 வரையான தலைப்புக்கள் மூன்றாம் பக்கத்திலும், இல. 13 முதல் 15 வரையான தலைப்புக்கள் நான்காம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) சரியான முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே தாங்கிக் கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி யொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என விண்ணப்பதாரர் பரிசீலித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

9.1 விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் - மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 300 ரூபா ஆகும். இத்தொகையை "இல. 150, கிருல வீதி, கொழும்பு 5" இல் அமைந்துள்ள நிலஅளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.**- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.01.18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
நிலஅளவைத் திணைக்களம்,
த. பெ. 506,
கொழும்பு.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு வினாப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கெனப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நிலஅளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, நவெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

நில அளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் :
(சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

2.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :----.
தமிழில் (திரு./திருமதி/செல்வி) :----.
ஆங்கிலத்தில் :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

4. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----.

4.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. பால் : (ஆண் - M, பெண் - F)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.

6.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்) :

மாவட்ட இலக்கம் :----.

மாவட்டத்தின் பெயர் :----.

6.2 எப்போதிலிருந்து அம்மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள் ? : ----.

7. தொழில்சார் தகைமைகள் :

7.1 அனுபவம் :------------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------

8. 8.1 திணைக்களச் சேவையில் சேர்ந்த பதவியும் திகதியும் :----.
8.2 ஊழியர் இலக்கம் :----.
8.3 அப்பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா ? :----.
8.4 சேவைக்காலத்துள் ஒழுக்காற்றுத் தண்டனை ஏதும் பெற்றுள்ளீர்களா ? :----.
8.4.1 விடை ஆம் எனின் அது குறித்த விளக்கம் :----.
8.5 ஆரம்பப் பதவியின் பின் வேறேதும் பதவிகளுக்கு நியமனமாகியிருப்பின் அது பற்றிய விபரங்கள் :

| பதவி | நியமனத் திகதி | சேவை நிரந்தரமாக்கல் |
|---|---|---|
| | | |

9. கல்வித் தகைமைகள்:
9.1 க.பொ.த. (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள் :
முதலாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

9.2 இரண்டாவது அமர்வு :

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

10. ஏனைய தகைமைகள் :--------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------

11. நீர் குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :-

ஆம் இல்லை

ஆம் எனில் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் ? :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.

13. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) .......................... ரூபா செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஈ) மேலும்பரீட்சை நடத்துதல்தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

(உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ...................................................................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளேன் எனவும் அவர் .................. ஆம் திகதி என் முன்னிலையில் மேலே கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:----.
பதவிப் பெயர்:----.
முகவரி----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)
திகதி:----.

15. **திணைக்களத் தலைவரின் பரிந்துரை:**

உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவை பரிசீலிக்கப்பட்டது. அவர் மேலே 8, 9 ஆம் தலைப்புக்களின்கீழ் வழங்கியுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்./விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி:----.

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 6.1 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ்வட்டவணை தொடர்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்களின் பெயர்கள் | நகரங்களின்/மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலநறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

12-525/1

---

**காணி அமைச்சு**

நில அளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை**

நில அளவைத் திணைக்கள அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கென நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்குரிய தகைமைகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வெற்றிடங்களின் எண்ணிக்கை : 7

2. **பதவியின் தன்மை.**- அளவை நடவடிக்கைக்குரிய உபகரணங்களையும் கருவிகளையம் பராமரித்தலும், சீர்படுத்துதலும்.

3. (i) **தோற்றவேண்டிய பரீட்சை வினாத்தாள் :**

| பாடங்கள் | காலம் | அதியுச்சப் புள்ளிகளின் அளவு | சித்தி எய்தத் தேவையான புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100% | 40% |
| தொழில் நுட்ப வினாத் தாள் | 2 மணித்தியாலம் | 100% | 40% |

(ii) இவ்வினாத்தாள்களின் மூலம் பெறப்படும் முழுப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு நடைபெறும்.

4. **ஆட்சேர்ப்புத் தரம்**.- நில அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவியின் தரம் III

5. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். நியமனம் மூன்றாண்டு கால தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். தெரிவுசெய்யப்படும் அலுவலர்கள் கொழும்பு தலைமை அலுவலகத்தில் மாத்திரம் சேவையாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் உள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும்.

6. **சம்பள அளவுத்திட்டம்** :

(MT- 1 - 2006A) 14,425 ரூபா - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - 23,665 ரூபா.

தர முறைமைக்கு அமைய உரித்தான ஆரம்பச் சம்பளப் படிமுறை :

**அட்டவணை இல. 1**

| தரம் | ஆரம்பச் சம்பளப் படிமுறை | ஆரம்பச் சம்பள அளவு |
|---|---|---|
| III | படிமுறை 01 | ரூபா 14,425 |
| II | படிமுறை 12 | ரூபா 16,045 |
| I | படிமுறை 23 | ரூபா 17,985 |

7. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

8. **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில்-

(1) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி
(2) கணிதம்

ஆகியவற்றோடு இன்னும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

***தொழில்சார் தகைமைகள்***.- அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஏற்புடைய இலத்திரனியல் அல்லது இயந்திரவியல் விஞ்ஞானம் தொடர்பான (NVQ) 5 மட்டத்திலான பாடநெறியொன்றினைப் பயின்றிருத்தல் வேண்டும்.

9. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- நடத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து வெற்றிட எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புக்காக தெரிவு நடைபெறும்.

10. சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.

11. **விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏனைய விபரங்கள்**.- (அ) (i) இவ்வறிவுறுத்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய 21 x 29 சென்ரி மீற்றர் (ஏ4) அளவிலான கடதாசிகளில் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தைத் தாமே தயாரித்துக்கொள்வதுடன் விண்ணப்பப்படிவத்தின் முதலாம் பக்கத்தில் இல. 1 முதல் 8 வரையும், இரண்டாம் பக்கத்தில் 9 முதல் 10 (ii) வரையும், மூன்றாம் பக்கத்தில் இல. 10(iii) முதல் 15 வரையான பந்திகளையும் உள்ளடக்கி பரீட்சைக் கட்டணம் செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டை அதன் கீழ்ப்பகுதியில் ஒட்டுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவி” எனக் குறிப்பிட்டு 2016.01.18 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ “நில அளவை நாயகம், நில அளவைத் திணைக்களம், கிருல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5” எனும் முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்புதல் வேண்டும். (தனிப்பட்ட பெயருக்கோ அல்லது வேறேதேனும் முகவரிக்கோ அனுப்புதலாகாது ;

(ii) பூரணமற்ற உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாத அல்லது தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவுறுத்தலுமின்றி நிராகரிக்கப்படும் ;

(iii) தபாலில் காணாமல் போகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்படமாட்டாது ;

(iv) எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது ;

(v) விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

(அ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள் பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பகுதியைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/ 2006 இன் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களிலுள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

12. கீழ்க்காணும் ஆவணங்கள் கோரப்படும் வேளையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(iv) குணநலச் சான்றிதழ்கள் இரண்டு.

**கவனத்தில் கொள்ளவும்**.- ஆவணங்களையோ அவற்றின் பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தனுப்புதல் ஆகாது.

13. ஏற்கனவே அரச சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

14. பரீட்சைக் கட்டணம் 800 ரூபாவாகும். எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டியிருத்தல் வேண்டும். காசுக் கட்டளையோ காசோலைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

15. **பரீட்சை நிலையங்கள்**.- தலைமை அலுவலகத்தில் அல்லது வேறு பொருத்தமான நிலையமொன்றில் பரீட்சையை நடத்த ஆவன செய்யப்படும். பரீட்சை நடைபெறும் திகதி விண்ணப்பதாரர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

16. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பங்களை அனுப்பியுள்ள மற்றும் அடிப்படைத் தகைமைகள் பூர்த்திசெய்துள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை நிலையத்தில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டார்கள். பரீட்சார்த்திகள் தமக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ இப்பதவிக்குரிய தகைமைகளைப் பூரணப்படுத்தியவர் என்பதற்கோ அங்கீகாரமெனக் கருதப்படலாகாது.

17. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தியொருவர் பரீட்சை மண்டபத்தில் அதன் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அடையாள அட்டை ;

(இ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

18. **பொய்யான தகவல்களை வழங்குதலுக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவருக்குரிய தகைமைகள் இல்லையென வெளிப்பட்டால் பரீட்சைக்குத் தோற்றுமுன்னரோ அல்லது பரீட்சை நடக்கும் காலத்திலோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு வேளையிலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்துள்ள எந்தவொரு தகவலும் அது பொய்யெனத் தெரிந்துகொண்டே அவரால் வழங்கப்பட்டிருந்தால் அல்லது ஏதேனும் முக்கிய தகவலை மறைத்திருப்பது அவர் தெரிவு செய்யப்பட்ட பின் தெரியவந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட இடமுண்டு.

19. **மொழி மூலம்**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் நடத்தப்படுவதோடு, விண்ணப்பதாரர்களுக்குத் தாம் விரும்பிய மொழி மூலத்தில் அதில் தோற்ற முடியும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

20. இந்நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் நிலஅளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, திசெம்பர் 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

நில அளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சை**

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

(ii) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :----.
தமிழில் (திரு./திருமதி/செல்வி) :----.
ஆங்கிலத்தில் :----.

2. (i) நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.

(ii) முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் :----.

3. பால் : (ஆண் - M, பெண் - F)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

4. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் :
(சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

5. இனத்தொகுதி :
சிங்களம்-1, இலங்கைத் தமிழர்-2, முஸ்லிம்-3, இந்தியத் தமிழர்-4, பறங்கியர்-5, மலாய்-6, வேறு-7)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

6. (i) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(ii) கிராம அலுவலர் பிரிவு :----.
(iii) குறித்த மாவட்டத்தில் எப்போதிலிருந்து வசிக்கின்றீர்கள் ? :----.

7. பிரசாவுரிமை :
பரம்பரை மூலம் ? :----.
பதிவின் மூலம் ? :----.

8. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

9. (i) பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

10. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள் :

முதலாவது அமர்வு :

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.

(ii) சுட்டிலக்கம் :----.

(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

இரண்டாவது அமர்வு :

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.

(ii) சுட்டிலக்கம் :----.

(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

11. ஏனைய தகைமைகள் :---------------------------------------
-----------------------------------------------------------
-----------------------------------------------------------

12. நீர் எப்போதாவது குற்றச் செயலொன்றிற்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :-

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

13. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் ? :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

(iii) செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

14. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யான தென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) இப்பரீட்சை நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட இணங்குகிறேன்.

(ஈ) .......................... ரூபா செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு அதற்குரிய இடத்தில் ஒட்டியுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... .................................................................................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளேன் எனவும் அவர் .................. ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதி செய்கின்றேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:----.
பதவிப் பெயர்:----.
முகவரி----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)
திகதி:----.

16. **திணைக்களத் தலைவரின் பரிந்துரை:**

விண்ணப்பிப்பவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்./ விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி:----.

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பப் பகுதி தேர்ச்சிபெற்ற சேவைத் தொகையில் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்

*2014.10.10 ஆந் திகதிய 1884 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பப் பகுதி தேர்ச்சிபெற்ற சேவைத் தொகையில் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான 2013 (2014) ஆம் ஆண்டின் விண்ணப்பம் கோரும் அறிவித்தல் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.*

2. தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள அம்பாறை, அநுராதபுரம், கண்டி ஆகிய தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் மொனராகலை, வீரவில ஆகிய தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆரம்பப் பகுதி தேர்ச்சிபெற்ற சேவைத் தொகைக்கு உரித்தான சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | 05 |

1. **ஆட்சேர்ப்பு முறை**.- தொழில்சார் பரீட்சை ஒன்றினதும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். முதலில் தொழில்சார் பரீட்சையொன்று நடத்தப்படுவதோடு, அப்பரீட்சையில் திறமை அடிப்படையில் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்பவர்களில் இருந்து, வெற்றிட எண்ணிக்கையின் இருமடங்கினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**தொழில்சார் பரீட்சை :**

| | நேரம் (மணித்தியாலம்) | அதிகூடிய புள்ளிகள் | சித்தி அடைவதற்கான புள்ளிகள் | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|
| 1. | 02 | 100% | 40% | 1. வீட்டு நிர்வாகம்<br>2. உணவு தயாரித்தல்<br>3. உணவு வழங்கல்<br>4. தூய்மை/விருந்துபசாரம் |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் அதிகூடிய புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 50 |
| மேலதிக அனுபவம் | 25 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

2. **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

3. **தொழில்சார் தகைமைகள்**.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) 2 ஆம் மட்டத்திற்கு குறையாத, உரிய பதவிக்கு ஏற்புடையதான துறையில், கீழே குறிப்பிடப்படும் தேர்ச்சிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(1) ஹோட்டல் பாடசாலை மூலம் வீட்டு நிர்வாகம் அல்லது சமையற்கலை தொடர்பாக நடைபெறும் ஆறு மாத கால பாடநெறியைப் பூர்த்திசெய்த சான்றிதழ் ;

அல்லது

(2) தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் வீட்டு நிர்வாகம் அல்லது சமையற்கலை தொடர்பான ஆறு மாத கால பாடநெறியைப் பூர்த்திசெய்த சான்றிதழ் ;

அல்லது

(3) அரச அல்லது அரச அங்கீகாரம்பெற்ற நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் வீட்டு நிர்வாகம் அல்லது சமையற்கலை தொடர்பான ஆறு மாத கால பாடநெறியைப் பூர்த்திசெய்த சான்றிதழ்.

*4. **சேவை அனுபவம்**.- உரிய தொழிலில் அரசாங்கத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 2 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.*

*5. **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையிலோ அல்லது மாகாண அரச சேவையிலோ உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.)*

*6. **சம்பளம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 6/ 2006* (IV) *இற்கு அமைய இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீட்டு இலக்கம் :* PL-2-2006 (A) *சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 12,210 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - ரூபா 18,600 உரித்தாகும்.*

*7. மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காக விண்ணப்பிக்கும் சகலரும் சிறந்த இயல்பையும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.*

*8. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்**.-* (i) *விண்ணப்பப்படிவங்கள் 2016.01.18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இலக்கம் 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் ;*

(ii) *அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஏ4 தாளைப் பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும் ;*

(iii) *விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும் ;*

(iv) *பெறப்பட்ட விண்ணப்பங்களுள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் ;*

(v) *தொழில்சார் பரீட்சைக் கட்டணம் 400 ரூபாவாக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளையில் உள்ள 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ;*

(vi) *விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படை அதிகாரி ஒருவர் அல்லது 20,030 ரூபாவைத் திரட்டிய மாதாந்த சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;*

(vii) *தற்போது அரசாங்கசேவையில் அல்லது மாகாண அரசாங்கசேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும் ;*

(viii) *இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாறான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றியும் அறியத்தரப்படமாட்டாது. உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.*

(ix) *விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*9. **அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கல்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அரச கரும மொழிகள் தொடர்பில் உரிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*10.* **தொழில்சார் பரீட்சை நடபடி முறைகள் :**

(i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பிய அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் தொழில்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) தொழில்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு–

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) தொழில்சார் பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும்.

*11.* **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.**– (i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை/அநாதை/தாரமிழந்தவர், அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) குறிப்பிடப்படுவதற்கு அமைய இந்த திணைக்களத்திற்கு உட்பட்ட எந்தவொரு தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், பதவிகளுக்கு உரித்தான ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் அரசினால் அல்லது பொறுப்பான அமைச்சினால் அல்லது தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளரினால் வெளியிடப்படும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை ஏற்பாடுகளுடன் தொடர்பான பொது நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகள் பொருத்தமானதாகும்.

*12.* நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் நிரப்புவதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

*13.* இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2015, திசெம்பர் 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சிபெற்ற சேவைத்தொகையில் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :–

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :-

(i) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
தொலைபேசி இலக்கம் :----.

(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :-

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :----.
(திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன)

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத் துறை/இடைநிலை அரசாங்கத் துறை/தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. (i) நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா/பதிவு செய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :----.

(பதிவு செய்ததன் மூலம் எனின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

(ii) இனம் :
(சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இலங்கை முஸ்லிம்-3, இந்திய வம்சாவளி-4, வேறு-5) ☐
(அடைப்பினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

12. நீங்கள் அரசாங்க பதவி ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :----.

13. தற்போது அரசாங்க சேவையில் உள்ளீர் எனின் உங்களுக்கு எதிராக திணைக்களம் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதா ? :----.

14. நீங்கள் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரத்தைக் குறிப்பிடவும் :----.

15. தொழில்சார் பரீட்சைக்காக கட்டணம் செலுத்திய மக்கள் வங்கிக் கிளை :----.
காசு செலுத்திய திகதி :----.

| பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும் |
| --- |

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எவையேனும் போலியானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ............................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் .......................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(இந்தப் பகுதி அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)
**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ................................................. .................................. .................... அவர்கள் .................................................................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் தொழில்சார் பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

12-542

## இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் III ஆம் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை-2015

இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேண்டி 2016.01.18 ஆந் திகதி யன்று 18 வயது இற்குக் கூடிய மற்றும் 30 வயதுக்கு குறைந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்பார்வை முகாமையாளர் (நிரந்தரப் பாதை) III ஆம் தரம்
மேற்பார்வை முகாமையாளர் (பாலம்) III ஆம் தரம்
மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடம்) III ஆம் தரம்
மேற்பார்வை முகாமையாளர் (தொழிற்சாலை) III ஆம் தரம்
மேற்பார்வை முகாமையாளர் (இயக்கத் தளம்) III ஆம் தரம்

2. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2016.01.18 ஆகும். சகல விண்ணப்பங்களும் அத்தினத்திற்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப்பத்திரமாவது தனிப் பட்ட பெயருக்கோ அல்லது கையில் கொண்டுவந்து பாரமளித்தலோ கூடாது. பூரணமற்ற மற்றும் முறையற்ற, தேவையான தராதரங்களைக் கொண்டிராத, முறைப்படி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பப்பத்திரங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களும் அதன் இலக்கங்களும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப்பத்திரத்தின் தலைப்பில் பரீட்சைக்குத் தோற்றும் நகரத்தையும் அதன் இலக் கத்தையும் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்ந் தெடுப்பை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. இருந்தும் போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகையைக் கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர். மேலும் குறிப்பிடப்பட்ட சகல நகரங்களிலும் போதுமானளவு விண்ணப்பதாரிகள் தொகை விண்ணப்பிக்காதவிடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்து வதற்கு பரீட்சை ஆணையாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. புகையிரத திணைக்களத்தின் சேவை அவசியத்தின் முன் னுரிமையின்படி வெற்றிடங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் விண் ணப்பதாரிகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் ஒரு பதவிக்கு நியமிக்கப்படுவதுடன் நியமனம் பெற்றதன் பின்பு பதவிகளுக்கிடையில் மாற்றல் பெற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**அட்டவணை**

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்களும் நகர இலக்கங்களும்*

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

**4. பதவியின், கடமையின் தன்மை :**

***மேற்பார்வை முகாமையாளர் (நிரந்தரப் பாதை).***- புகையிரதப் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் புகையிரதப் பாதைக் கட்டமைப்பைப் புதியதாக அமைத்தல், பழுது பார்த்தல், பராமரித்தல் மற்றும் பேணுகையின்போது மேற்பார்வை முகாமையாளரின் பொறுப்புக்களை மேற்கொள்ளல்.

***மேற்பார்வை முகாமையாளர் (பாலம்).***- புகையிரத போக்கு வரத்திற்கு ஏற்றவகையில் புகையிரதப் பாலம் கட்டமைப்பைப் புதியதாக அமைத்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் பேணுகையின்போது மேற்பார்வை முகாமையாளரின் பொறுப்புக்களை மேற்கொள்ளல்.

***மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடம்).***- கட்டிடங்கள் மற்றும் கட்ட மைப்புக்களை புதியதாக அமைத்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் பேணுகையின்போது மேற்பார்வை முகாமையாளரின் பொறுப்புக்களை மேற்கொள்ளல்.

***மேற்பார்வை முகாமையாளர் (இயக்கத் தளம்).***- புகையிரத என்ஜின், பொருட்கள் பெட்டி மற்றும் பயணிகள் பெட்டிகளில் ஏற்படும் தொழில்நுட்ப குளறுபாடுகளைக் கண்டறிந்து அவற்றைப் பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் வெகன் மற்றும் பெட்டிகள் சேவையில் ஈடுபடுத்துவதற்கு முன்பு அவற்றை ஓட்டிப்பார்த்து பரீட்சித்து உறுதிப்படுத்தல் மற்றும் அந்நடவடிக்கைகளுக்கான இயந்திர உபகரணங்கள், உதிரிப்பாகங்களை ஒன்றுசேர்த்து களஞ் சியப்படுத்தி களஞ்சியசாலையைப் பராமரித்தல், பேணுகை செய்தல், இயக்கத்தளங்களில் இயந்திர உபகரணங்களைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை முகாமையாளரின் பொறுப்புக்களை மேற்கொள்ளல்.

***மேற்பார்வை முகாமையாளர் (தொழிற்சாலை).***- புகையிரத போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் புகையிரத என்ஜின், பொருட்கள் பெட்டி மற்றும் பயணிகள் பெட்டி உட்பட ஏனைய இயந்திர உபகர ணங்களைப் பழுதுபார்த்தல், பராமரித்தல், ஏற்புடையவாறு தேவையான உதிரிப்பாகங்களைப் புதிதாக உற்பத்தி செய்தல் மற்றும் பழுதுபார்ப்பின் பின்பு புகையிரத என்ஜின்களை இயக்கி பரிசோதித்துப் பார்த்து உறுதிப்படுத்தல், அந்நடவடிக்கைகளுக்குரிய இயந்திர உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் ஒன்றுசேர்த்து களஞ்சியப்படுத்தி பராமரித்தலும், பேணுகை செய்தலும், தொழிற் சாலைகளின் இயந்திர உபகரணங்களைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளின்போது மேற்பார்வை முகாமையாளரின் பொறுப் புக்களை மேற்கொள்ளல்.

5. **சம்பள அளவுத்திட்டம் :**

(i) (MN-3-2006-A) ரூபா 15,005-4 x 180-6 x 240- 11 x 320-20 x 360-27,885 ரூபா ஆகும்.

(ii) இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் உரித்துள்ளது.

(iii) சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின்கீழ் செலவு செய்யப்பட்ட தொகையை பிரதிலாபங்களாகப் பெறுவதற்கும் உரித்துள்ளது.

(iv) சேவையின் தேவையின் அடிப்படையில் உத்தியோகபூர்வ விடுதி பெறுவதற்கும் சந்தர்ப்பம் உள்ளது.

6. (அ) **கல்வித் தகைமைகள் :**

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு விடயத்துடன் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் ;

உடன்

(ii) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் பிரயோக கணிதம், தூய கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், ஒன்றிணைந்த கணிதம் ஆகிய விடயங்களில் இரு விடயங்கள் உட்பட விஞ்ஞான/ கணித விடயங்களுக்குரிய மூன்று (3) விடயங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) **தொழிற் தகைமைகள்**.- மேலுள்ள (அ) (i) மற்றும் (ii) இல் உள்ள அடிப்படைக் கல்வித் தகைமையுடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தராதரம் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும் :

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியலாளர் விஞ்ஞான தேசிய டிப்ளோமா

அல்லது

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

(இ) **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியுமாகும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று சகல தகுதிகளையும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- மேலுள்ள (6) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்து மூல போட்டிப் பரீட்சை நடாத்தி பெற்றுக்கொள்ளும் திறமையின் வரிசைப்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும். விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படுவதுடன் காத்திருப்போர் இடாப்பில் வைத்து ஆட்சேர்ப்பு செய்யப்படமாட்டாது.

8. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சைத் திட்டம் :**

(i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறை :

(அ) பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும் ;

(ஆ) சகல கேள்வித்தாள்களுக்கும் தோற்ற முடிவது மேலுள்ள (06) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழி மூலமாகும். விண்ணப்பிக்கப்பட்ட மொழி மூலத்தைப் பின்பு மாற்றம் செய்ய முடியாது.

(iii) *பரீட்சை விடயங்கள் :*

(அ) பொது அறிவும் நுண்ணறிவும்

(ஆ) தொழில்நுட்ப அறிவு

(iv) *பாட உள்ளடக்கம் :*

(அ) பொது அறிவும் நுண்ணறிவும்
(காலம் : 1 மணித்தியாலம்) - புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான விவரணத்தையும் தெளிவுபடுத்தும் மற்றும் சரியான நிகழ்வுத் தீர்வுகளுக்கு வரும் ஆற்றலையும், பொது அறிவு மற்றும் புத்திக்கூர்மையை அளவிடும் வகையில் நோக்காகக் கொண்டு இக்கேள்வித்தாள் தயாரிக்கப்படும். இது கணித குளறுபாடு, பொது அறிவு, சூழல் பற்றிய கேள்விகளை உள்ளடக்கிய பல்வித கேள்வித்தாளாகும்.

(ஆ) தொழில்நுட்ப அறிவு (காலம் : 3 மணித்தியாலம்) - புள்ளிகள் 100 ஆகும்.

ஆட்சேர்ப்புத் தராதரமாக குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா சான்றிதழ் அல்லது பொதுவான சான்றிதழ் உடையவரிடம் இருக்கவேண்டிய தொழில் நுட்ப அறிவின் அளவையும் மற்றும் நிர்மாணிப்பின்போதும் பராமரிப்பு கேத்திரத்தில் பயன்படுத்தப்படும் நவீன இயந்திர உபகரணங்களின் செயற்பாடுகள் சம்பந்தமாக உள்ள அறிவினைப் பரீட்சிக்கும் வகையில் கேள்விகளைக் கொண்டிருக்கும்.

9. **தேர்ந்தெடுக்கும் முறை**.- ஒவ்வொரு பாடத்திலும் 40 வீத புள்ளிகளை அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரியின் முழுப்புள்ளிகளின் திறமைகளின் அடிப்படையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தராதரங்கள் பரிசீலிக்கப்படும். விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களின்படி ஒவ்வொரு பதவிகளுக்கும் நியமிக்கப்படுவர். நியமிப்புக்காக விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவது மேலுள்ள 8 இல் IV இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள

பாடங்களுக்குக் கீழ்ப்பட்டு பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற திறமையின் வரிசை கிரமப்படியாகும்.

10. **விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான அறிவுறுத்தல்.**- (i) விண்ணப்பப்படிவத்தை ஏ-4 (துட்டச்சு தாளில்) அளவுள்ள தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். (தமது கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்.)

விண்ணப்பப்படிவத்தில் :-

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 8 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 9 இலிருந்து 11 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திணைக்கள/நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்துகையும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ்வறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக்கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். இப்பரீட்சைக் கட்டனம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவிலிடும் வகையில் நாட்டின் எப்பாகத்திலும் அமைந்துள்ள தபால் அலுவலகங்களிலும்/ உப தபால் அலுவலகங்களிலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப் பப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கழன்றுவிடாதவாறு ஒட்டிவிடல் வேண்டும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை இணைத்து அனுப்பினால் அல்லது வேறு முறைகளில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டால் அது விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீள வழங்கப்படாததுடன் வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்யவும் முடியாது.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் பதவிக்கு சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015" என குறிப்பிடவும்.

(iv) ***வெளிவாரி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.***- விண்ணப்பப்படிவத்தையும் பரீட்சை அனுமதி அட்டை யையும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் தோற்றினால் கையொப்பத்தை நிறுவன பிரதானி அல்லது அவரின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். அவ்வாறில்லா விண்ணப்பதாரிகள் அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், 2,40,360 ரூபாவான வருடாந்த சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர பதவி நிலை தரத்தை வகிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோத்தர்களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவம் கட்டாயமாக திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்படிவம் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படல் அவர் சகல தகைமைகளையும் கொண்டுள்ளவர் எனக் கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமைகளைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து அவ் விண்ணப்பதாரியின் பரீட்சை போட்டியிடுகை இரத்துச்செய்யப்படும்.

(vii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு ஐந்து நாட்களுக்குப் பின் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையில் விசாரித்தறிதல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது உமது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். நீர் கொழும்புக்கு வெளியான பிரதேச விண்ணப்பதாரியாயின் உமது மேற்குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்ட கடிதத்தில் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை உமக்கு அனுப்புவதற்காக உமது பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு அதை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி விசாரித்து அறிந்துகொள்ளல் தகுந்ததாகும். அங்கு அவசிய தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக உம்மிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப் பத்திரத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டின் பிரதியையும் மற்றும் விண்ணப்பப்பத்திரம் பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டு போன்றவற்றை தயாராக வைத்திருத்தல் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(viii) இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காகவேண்டி ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப் பட்டுள்ள ஆள் அடையாள அட்டை அல்லது அனுமதிக்கப்பட்ட காலம் முடிவுபெறாத கடவுச்சீட்டு மாத்திரமாகும்.

(ix) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை பெற்றுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரி தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை சுட்டெண்ணின்கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய தமது பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் பாரம் கொடுத்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை முன்வைக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(x) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்ப தாரிகள் உட்பட்டவர்களாவர். அச்சட்டதிட்டங்களை மீறுகின்றபோது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

10.1 ***பரீட்சைப் பெறுபேறு.***- அறிவித்தலின் 9 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இரண்டு விடயங்களிலும், ஒவ்வொரு விடயத்திலும் 40% இற்குக் குறையாமல் பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர் உள்ளடக்கப்பட்ட திறமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் ஆவணம் புகையிரத பொது முகாமையாளருக்கு வழங்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறு தனிப்பட்ட முறையில் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் வலையமைப்பின் ஊடாக பிரசித்தப்படுத்தப்படும்.

11. **சேவை நிபந்தனை.**- ஆட்சேர்ப்பு செய்யப்படுவது புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் III ஆம் தரத்திற்காவதுடன் குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்ப சம்பளத்தில் வைத்து வழங்கப்படும்.

12. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.**- (i) இப்பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக உதவித்தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/ 2007 இன் ஏற்பாடுகளின்படி அரச சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழி சம்பந்தமான அறிவை 5 வருடங்களுக்குள் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு பெறாதவர்களின் சம்பள ஏற்றம் சித்தியடையும் வரை வழங்கப்பட மாட்டாது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக் கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள செயற் பாட்டுத் திட்ட நியதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும் திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்படக் கடமைப்பட்டுள்ளனர்.

13. இவ்வறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் புகையிரத பொது முகாமையாளருக்கு உரியதாகும்.

14. இவ்வறிவித்தலில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல அறிவித்தல்களின் கருத்துகளுக்கிடையில் ஏதேனும் வித்தியாசம் அல்லது பொருந்தா தன்மை உள்ளதாயின் அவ்வாறான இடத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தல் சரியானதாகக் கருத்திற்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10.

(இதன்படி ஏ4 கடதாசியின் இரு பக்கங்களையும் பாவித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்பு விண்ணப்பம் கோரல் அறிவித்தலை வாசித்து நன்றாக புரிந்துகொள்ளவும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் III ஆந் தர பதவிகளுக்கு வெளி விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை - 2015**

External Recruitment For The Post in Railway Supervisory Management Service Grade III- 2015

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)
பிரசாவுரிமை :
பரம்பரை மூலம் - 1 [ ]
பதிவு மூலம் - 2 [ ]

| பரீட்சைக்குத் தோற்றுவதற்கு : விண்ணப்பிக்கும் நகரம் : | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம் | | |
| 2 ஆவது விருப்பம் | | |
| பரீட்சை அறிவித்தலின் முதல் பந்தியை பார்க்கவும். விண்ணப் பிக்கும் நகரத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது. | | |

1. முதலெழுத்து பின்னுக்கு வருமாறு முதலெழுத்துடன் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.
   (உதா : PERERA R. M. D. C. P. A.)

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.

3. நிரந்தர முகவரி :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.

4. ஆண்/பெண் தன்மை :—
   பெண் - 1
   ஆண் - 0 [ ]
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   | | | | | | | | | | |
   |---|---|---|---|---|---|---|---|---|---|

6. தேசிய இனத்தொகுதி :
   சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, பறங்கியர்-5, மலாயர்-6 [ ]
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

7. வதிவிடம் :
 (i) கிராம அலுவலர் பிரிவு :————. அதன் இலக்கம் : ————.
 (ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
 (iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :–

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

9. தொலைபேசி இலக்கம் :

10. 2016.01.18 ஆந் திகதியன்று வயது :–

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

11. கல்வித் தராதரம் :
 (i) க. பொ. த. (சா. தரம்) :
 பரீட்சை சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |
| (6) | | |
| (7) | | |
| (8) | | |

 (ii) க. பொ. த. (உயர் தரம்) :
 பரீட்சை சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |

 (iii) தொழில் தராதரம் :————.

12. நீர் எப்போதாவது எக்குற்றத்திற்காகவேனும் நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(ஏற்புடைய கூட்டில் ✓ அடையாளம் இடுக)

13. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஏதேனும் பகுதிகளைப் பூரணப் படுத்தப்படாததால் மற்றும்/ அல்லது பிழையான முறையில் மற்றும்/ அல்லது அசத்தியமான முறையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் எனது விண்ணப்பத்தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதை நான் நன்கறிவேன். அதனால் ஏற்படும் விளைவுகளை நான் தனிப்பட்ட வகையில் ஏற்றுக்கொள்கிறேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மைக்குப் புறம்பானதென நான் நியமனம் பெற்ற பின்பு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு கீழ்ப்படுவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் ஏதேனும் விளைவுகள் ஏற்படின் அவற்றையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்கிறேன்.

(இ) ............................ ஆந் திகதி தபால் அலுவலகத்திற்கு 500 ரூபா செலுத்திப் பெற்றுக்கொண்ட ........................ இலக்கம் உடைய பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு ஒட்டவும். |
|---|

(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளவும்)

(ஈ) இப்பரீட்சையின் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க இணங்குகிறேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர் ..................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.
(தயவுசெய்து இறப்பர் இலட்சினையைப் பொறிக்கவும்.)

15. **திணைக்கள/நிறுவன தலைவரின் உறுதிப்படுத்துகை :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைத்துள்ள திரு. ........................ என்பவர் ......................... இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ................................ ஆந் திகதியிலிருந்து ......................... வரை ............................. ஆக சேவை புரிகின்றார். அவருக்கு எதிராக முடிவுபெறாத ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் உள்ளது/ இல்லை. அவரின் சேவை நடத்தை மற்றும் சேவைக்கு சமுகம் தரல் திருப்திகரமானதாகும்/ அதிருப்திகரமானதாகும். குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அப்பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளது. அவர் புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
திணைக்கள/நிறுவன தலைவரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலட்சினையைப் பொறிக்கவும்.)

12-588

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.